**தலைப்பு 237 – தேசிய திட்டமிடல் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய தொழில் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2020 மே 31ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 திசெம்பர் 03 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியேகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின்** பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமான தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டது.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாக,

(ஆ) கடந்த வருடத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது அறிக்கையில் கூட்டிக் காண்பிக்கப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரை

### 1.6.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| அவதானிப்புகள் | | | | |
|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு** | **இணக்கமின்மைகள்** | **பரிந்துரைகள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 7.2 ஆம் பிரிவு | உடன்படிக்கையின் பிரகாரம், உரிய காலம் நிறைவடைந்த பின்னர் உத்தியோகபூர்வ இல்லங்களிலிருந்து வெளியேறுவதற்கான சலுகைக் காலம் நிறைவடையும் போது, தாபனவிதிக் கோவையின் பிரகாரம், அறவிடப்பட வேண்டிய பணம் 2019ஆம் ஆண்டினுள் அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும், 2020 செப்தம்பர் மாதமளவில் உடன்படிக்கை காலத்தினை விஞ்சிய 04 உத்தியோகத்தர்களின் | தாபன விதிக்கோவைக்கமைய செயற்பட்டு ஏனைய உத்தியோகத்தர்களுக்கு சந்தர்ப்பத்தினை பெற்றுக்கொடுத்தல். | அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் பணிப்பாளரொருவர் தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகளுக்கான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை சரியானது ஆகும். பரிந்துரைகளை குறித்துவைத்துக் கொள்கின்றேன்.<br><br>பணிப்பாளரொருவர் உத்தியோகபூர்வ இல்லத்தில் தங்கியிருப்பதற்கான காலம் 2020.06.30 வரை |

காலத்தினை நீடிப்பு செய்து தொடர்ந்தும் உத்தியோகபூர்வ இல்லங்களில் குடியிருக்கின்றனர்.

நீடிப்பு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்காவிடின் தாபனவிதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 7.1 மற்றும் 7.2 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாகவும், அவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், மீளவும் 2020 திசெம்பர் 31 வரையிலும் தங்கியிருப்பதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது.

பிரதிப் பணிப்பாளரொருவருக்கு உத்தியோகபூர்வ இல்லத்தில் வசிப்பதற்கு வழங்கப்பட்ட காலம் 2020.11.07 முதல் 06 மாதங்களுக்கு பொதுவான வாடகைக்கு தங்கியிருப்பதற்கு கால நீடிப்பு செய்யப்பட்டுள்ளது. அந்த காலம் நிறைவடைந்த பின்னர் உத்தியோகபூர்வ இல்லத்தினை ஒப்படைக்காவிடின் தாபனவிதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 7.1 மற்றும் 7.2 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுமென என்னால் அறிவிக்கப்பட்டுள்ளது.

பெண் உத்தியோகத்தருக்கு உத்தியோகபூர்வ இல்லத்தில் தங்கியிருப்பதற்கான

| | | | |
|---|---|---|---|
| | | | காலத்தினை 2020.10.31ஆந் திகதி வரையிலும் நீடிப்பு செய்யப்பட்டுள்ளதுடன், அந்த திகதியின் பின்னர் தாபனவிதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 7.1 மற்றும் 7.2 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு நிறுவனத்தின் தலைவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளரின் 2017 யூன் 28ஆந் திகதிய 01/2017ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை | உத்தியோகபூர்வ இல்லங்களுக்குரிய தகவல்கள் கொம்பிரோலர் நாயகத்திற்கு 2017 ஒக்தோபர் 31ஆந் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், இதுவரையிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை . | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | இந்த திணைக்களத்திற்கு சொந்தமான கொழும்பு 05, நாரஹேன்பிட்டிய, தாபரே வீதியில் அமைந்துள்ள 07 உத்தியோகபூர்வ இல்லங்களின் அளவீட்டு பணிகள் 2020.09.11 மற்றும் 2020.09.18ஆந் திகதிகளில் இலங்கை அளவையாளர் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்குரிய வரைபடங்கள் அண்மையில் கிடைக்கவுள்ளது. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 செலவின முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மூலதன செலவுகளுக்காக மிகை நிதி ஒதுக்கீடு செய்யப்படடிருந்த காரணத்தால், நிதியேற்பாட்டினை பயன்படுத்தியதன் பின்னர் எஞ்சிய அளவானது தேறி நிதியேற்பாட்டின் 85 சதவீதம் ஆகும். | மதிப்படுகளை இயலுமானவரையில் சரியாக தயாரிக்க வேண்டும். | குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்பிற்காக கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை சரியானதாகும். பரிந்துரைகளை குறித்துவைத்துக்கொள் கின்றேன். |

| | | |
|---|---|---|
| (ஆ) மீளாய்வாண்டினுள் 05 செலவின விடயங்களின் அடிப்படை செலவினம மதிப்பீட்டுடன் குறைநிரப்பு மதிப்பீடு மற்றும் நி.பி. 66 மூலமான திருத்தங்கள், மூலதன செலவின மதிப்பீட்டின் 30 சதவீதம் மறை மற்றும் 100 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. | மதிப்படுகளை இயலுமானவரையில் சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்பிற்காக கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை சரியானதாகும். பரிந்துரைகளை குறித்துவைத்துக்கொள் கின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பணிகளை நிறைவேற்றாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 மற்றும் 2020ஆம் ஆண்டுகளுக்குரிய அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் நாளதுவரையாக்கப்பட்டிராததுடன், அரசின் நிதிப் பிரமாணக் கோவையில் உள்ளடக்கப்பட்டுள்ள தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பொறுப்பு தொடர்பில் தெளிவுபடுத்தும் பிரமாணங்கள் நடைமுறைக்கு பொருத்தமான முறையில் திருத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | பொருளாதாரத்திற்கு தேசிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் வருடாந்தம் நாளதுவரையாதல்ட மற்றும் நிதிப்பிரமாணங்கள் காலத்திற்கு காலம் திருத்தப்படுகின்றமை யால் அதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்பிற்காக கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை சரியானதாகும். பரிந்துரைகளை குறித்துவைத்துக்கொள்கி ன்றேன். |

### 3.2 முகாமைத்துவ நலிவுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கடற்கரையின் மணலை வளப்படுத்தும் செயற்திட்டம் தொடர்பில் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் தேவைப்பபாட்டின் பிரகாரம் | நிகழ்ச்சித்திட்டத்தி ற்கான நிதியேற்பாட்டினை மேற்கொள்வதற்கு | குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்பிற்காக கணக்கீட்டு உத்தியோகத்தரின் |

பொருத்தமான பொருளாதார, சமூக மற்றும் சுற்றாடல் பகுப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிராமையால் அவ்வாறானதொன்றை மேற்கொள்வதற்காக தொழில்நுட்ப உதவியினைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்திட்ட முன்மொழிவொன்று மற்றும் அதனை அடிப்படையாக கொண்ட புதிய செயற்திட்டமுன்மொழிவொன்றினை சமர்பிபக்குமாறு குறித் திணைக்களத்தின் தலைவருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அவ்வாறானதொன்று இடம்பெற்றிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. செயற்திட்டத்திற்காக பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டதன் பின்னர் அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தினன் பிரகாரம் பாதீட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும், பரிந்துரைகளை முன்வைப்பதற்கு முன்னர் பாதீட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

மேலும், அந்த செயற்திட்ட முன்மொழிவு காலத்திற்கு தேவையானதொன்றாக கருதி நடைமுறைப்படுத்தல் நிலைபேறான தீர்வொன்றாக அமையுமெனின் அந்த முன்மொழிவினை செயற்படுத்தல் தொடர்பில் எதிர்ப்பொன்று காணப்படவில்லை என தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் கருத்து தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், அதன் மூலம் தேவையான முடிவு தவறாகக்கூடும் என அவதானிக்கப்படுகின்றது.

முன்னர் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பரிந்துரையை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கருத்துரை சரியானதாகும். பரிந்துரைகளை குறித்துவைத்துக்கொள்கின் றேன்.